கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண் 189/2013

வாதியின் சாட்சி என்பவரின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44-வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி ) என்னால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: திருப்பதி | சாதி : |
| த/பெ. க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

<u>10.02.2020</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கின் 1ம் வாதி . நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தை நான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விபரங்கள் நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சான்றாவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.17.10.2005ம் தேதியிட்ட திருப்பதி ஆசாரிக்கு பொன்னுசாமி நாடார் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் வா.சா.ஆ.1. 27.03.2013ம் தேதியிட்ட எனது வீட்டு வரி இரசீது வா.சா.ஆ.2. 20.06.1967ம் தேதியிட்ட மகமாயி அம்மாளுக்கு மீனாட்சி மற்றும் ஒருவர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ,3. 05.05.1973ம் தேதியிட்ட வெங்கடாசலம் ஆசாரி , நாகம்மாள் ஆகியோருக்கு சுப்பாநாயக்கர் எழுதிக்கொடுத்த பதிவு கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 05.05.1973ம் தேதியிட்ட லட்சுமி அம்மாளுக்கு சுப்பா நாயக்கர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. தாவா 1 மற்றும் 2ம் இலக்கச் சொத்தை காட்டும் புகைப்படங்கள் எண்ணம் 4 (2) அவை முறையே வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ,7. மேற்படி புகைப்படங்களுக்கான குறுந்தகடு வா.சா.ஆ.8. 2ம் வாதி 2ம் இலக்கத்திற்கு செலுத்திய மிண்கட்டண இரசீதுகள் எண்ணம் 3 வா.சா.ஆ,9 . நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் முறையே நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.